விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 21 | சனிக்கிழமை | (06.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 323

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இலங்கையில் விரைவில் சமாதானம் மலரும்

# புலிகளை பேச்சு மேசைக்கு மீண்டும் கொண்டுவர முடியும்!

### ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவில் நம்பிக்கை தெரிவிப்பு

(புதுடில்லி)

**தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை தனக்கு ஆழமாக அதிகரித்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

நேற்று மாலை இந்தியாவின் பிரபல ஆங்கில நாளிதழான இந்துஷ்தான் நடாத்தி வரும் 'வேற்றுமையில் தெற்காசியாவை ஒற்றுமையாக வைத்திருத்தல்' என்ற நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றினார்.

இதனையடுத்து ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்குகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையின் இன விவகாரம் குறித்து அவர் மேலும் விளக்கிக் கூறுகையில்,

இலங்கையில் விரைவில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் நான் ஆர்வம் கொண்டுள்ளேன். ஆனால் அதில் நான் மட்டும் ஆர்வம் கொண்டால் போதாது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியாவிற்குச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியை நேற்றுமாலை சந்தித்தபோது...

## சோனியா – சந்திரிகா நேற்று முக்கிய சந்திப்பு

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பல வருடங்களாக நேரு காந்தி குடும்பத்தினர் பண்டாரநாயக்க குடும்பத்திற்குள் ஆழமான நட்புக் குறித்து இச் சந்திப்பில் இரண்டு தலைவர்களும் நினைவு கூர்ந்தனர்.

இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் தற்போது நிலைகுலைந்த விபரங்களை சோனியா காந்தி கேட்டறிந்து கொண்டார். இச் சந்திப்பின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குளத்தில் மூழ்கி குடும்பஸ்தர் மரணம்

(துன்னாலை)

துன்னாலை முறாவில் பிள்ளையார் கோவில் குளத்தில் குளிர்த்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

புலோலியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான இ. ஜெயதாஸ் (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நண்பகல் 11 மணியளவில் இக் குளத்துக்கு 4 பேர் குளிக்கச் சென்றதாகவும் இவர் நடுக்குளத்தில் குளித்துக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது.

இதனையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த இளைஞர்களும் பருத்தித்துறைப் பொலிஸாரும் வலை வீசியே பிரஸ்தாப நபரின் சடலத்தை இழுத்தெடுத்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ-105,101,113,35,52,)

### கோப்ரல் ராஜபக்ஸ சார்பில் சட்டத்தரணி ஆஜராகவில்லை

## காணாமல் போனோர் வழக்கு டிசம்பர் மாதம் ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும் இவ் வழக்கின் முதலாவது எதிரி மனுதாரரான லயன்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஸ சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

இதனையடுத்து மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா இவ் வழக்கினை டிசம்பர் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நேற்றைய தினம் ராஜபக்ஸவை யாழ். சிறையில் உத்தியோகத்தர்கள் பலத்த பாதுகாப்புடன் அழைத்து வந்தனர்.

எட்டாவது தடவையான நேற்றைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவு மீனவர்கள் மூவரைக் காணவில்லை!

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்குக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற மூன்று மீனவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை என காணாமல்போன மீனவர் ஒருவரின் தந்தை புங்குடுதீவு கடற்படை முகாமில் முறையிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மீன்பிடிப்பதற்காகச் சென்ற புங்குடுதீவு நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த தேசியம் தேவராஜ் (வயது 16), கதிர்காமு ஜெயசீலன் (வயது 29), எஸ். கொலின் (வயது 27) ஆகியோரே காணாமல்போனதாக முறையிடப்படுகிறது. (ச-26)

## யசீர் அரபாத் செய்தியில் குழப்பம் தொடர்கிறது

### மரணம் என்ற தகவலுக்கு மறுப்பு

(பாரிஸ்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் மரணமடைந்து விட்டதாக இஸ்ரேலியத் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் அச் செய்தியை பலஸ்தீனப் பிரதமர் மறுத்துள்ளார். உடல்நிலை மோசமடைந்து கோமா நிலையில் இருந்த யசீர் நேற்று முன்தினமிரவு இறந்துவிட்டதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோமா நிலையில் வைத்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தபோதிலும் அவரது உயிரை வைத்தியர்களால் காப்பாற்றமுடியவில்லை என அத் தொலைக்காட்சி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை யசீர் அரபாத் பாரிஸ் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் கோமா நிலையில் இருந்து மீளவில்லை எனவும் மருத்துவமனை செய்திகள் தெரிவித்துள்ளன. (ச)

## அமெரிக்க அதிபர் புஷ்ஷிற்கு ஜனாதிபதி சந்திரிகா வாழ்த்து

(கொழும்பு)

அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதற்கு இலங்கை அரசின் சார்பாகவும் இலங்கை மக்களின் சார்பாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புஷ்ஷிற்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பெற்றுள்ள இம் மாபெரும் வெற்றியின் மூலம் அமெரிக்க மக்கள் அவரின் தலைமைத்துவத்திற்கும் அவரின் அரசியல் கொள்கைகளையும் முற்றாக ஏற்றுக்கொண்டதை வெளிப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 24,767 மில்லியன் ரூபாவை ஜப்பான் இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது

(கொழும்பு)

ஜப்பான் அரசாங்கம் 36 வது தடைவையாகவும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைக ளுக்கென நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இதன் நிதி உதவியாக 24, 767 மில்லியன் ரூபாக்களை இலங்கைக்கு வழங்க முன் வந்துள்ளது.

சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கியின் நிதி உதவியுடன் இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி உதவி மூலம் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் அபிவிருத்தி முனனெடுக்கப்படவுள்ளது.

இவ் நிதி உதவி தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜப்பானிய தூதுவர் அக்கியூவோ சுடா போர் நிறுத்த உடன்பாடு அமுலில் உள்ள அதேநேரம் சமாதான பேச்சுவார்த்தைகள் இன்னமும் ஆரம்பமாகவில்லையென்ற விடயம் கவலைக்குரியதாகும்.

பேச்சுக்கள் முன்னெடுக்கபபட்டால் தான் அபிவிருத்திகளை தங்கு தடையின்றி மேற்கொள்ள முடியும்.

எனவே அரசும் புலிகளும் அபிவிருத்திகளை கருத்தில் கொண்டு உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றார். (க-8)

## திறப்பு விழா

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் கணனி அறை, ஒலி அமைப்பு அறை திறப்பு விழா நாளைக காலை 9.30 மணியளவில் பாடசாலை அதிபர் ச. சிறிராமச்சந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. கஜேந்திரகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி. செல்வரத்தினம் கலந்து கொளளவுள்ளார். (ப-101)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதியில் அருகருகே முறையே 1 பரப்பு 5.38 குளி, 1 பரப்பு 3.22 குளி அளவு கொண்ட இரு காணிகள் வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு விருப்பப்படி சேர்த்தோ தனியாகவோ வாங்கலாம் வீட்டில் திருத்த வேலைகள் உண்டு.

தொடர்பு: 28, 4 ஆம் குறுக்கு வீதி யாழ்ப்பாணம்.

T.P: 2225381. (c/678)


## காணியை ஊடறுத்து வீதி அமைத்த இராணுவத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(வவுனியா)

வவுனியா நொச்சி மோட்டைப் பகுதியில் இராணுவம் தனது காணியை ஊடறுத்து வீதி அமைத்துள்ளதாக காணி உரிமையாளர் வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளாா்.

இந்த வீதி இராணுவ முகாமொன்றை அண்மித்துள்ள தால் தான் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக இராணுவத்தையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையையும் குறிப்பிட்டுள்ளார். (க-8)

## புலிகளின் பெயரை பயன்படுத்தி திருமலையில் கொள்ளை!

(திருகோணமலை)

திருகோணமலை சாம்பல்தீவு சல்லி கிராமத்தில் விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி ஆயுதக் குழுவொன்று கொள்ளைகளில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

கருணா குழுவைத் தேடி வருவதாகக் கூறிக் கொண்டு இரவு நேரங்களில் வீடுகளுக்குள் பிரவேசிக்கும் இக் குழுவில் 6 பேர் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய் எஸ். எம்.பற்றீசியா என்பவருடைய வீட்டில் 23,000 ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு பீகௌசல்யா தேவி என்பவருடைய வீட்டில் ரூபா 12 ஆயிரத்து 230 பெறுமதியான நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

உப்புவெளி பொலிசில் இது தொடர்பான புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (க)

## முறையான யோசனையை முன்வைத்தால் தனித்தரப்புக் கோரிக்கைக்கு இடமிராது

### அமைச்சர் சேகு இஸதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை கவனத்தில் கொண்டு இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தீர்வு யோசனையொன்றை முன்வைப்பார்களானால் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு என்ற கோரிக்கைக்கு இடமிராது என தேசிய ஐக்கிய முன்னணி செயலாளர் நாயகமும் பிரதியமைச்சருமான சேகு இஸத்தீன் தெரிவிக்கின்றார்.

பிரெஞ்ச் நாட்டுக் குழுவொன்றுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பின்போது இனப் பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்ட போது முஸ்லிம்களின் நிலைப்பாட்டை இப்படி விளக்கிக் கூறியுள்ளார். வடகிழக்கு இணைந்த தீர்வுதான் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையுமென்பதை முஸ்லிம்கள் நிராகரிக்கவில்லை.

ஆனால் அந்த இணைந்த மாகாணத்தில் நிலத் தொடர்பற்ற உள்ளக சுயாட்சி தமக்கு தேவையென முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

முஸ்லிம்களுக்கு தனித்துவமான அந்த சுயாட்சியை வழங்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் தார்மீகப் பொறுப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மாதிரிப் பரீட்சை

(சாவகச்சேரி).

தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணிதம், சமூகக்கல்வி, விஞ்ஞானம் மாதிரிப் பயிற்சிப் பரீட்சைகள் எதிர் வரும் 8, 9 ஆம் திகதிகளில் தென்மராட்சிப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

பரீட்சைகள் முடிந்ததும் விடைத்தாள் மீள வலியுறுத்தற் செயற்பாட்டையும் மேற்கொள்ள வேண்டும்.. என்றும் இதன் புள்ளிகளை இதற்கென வழங்கப்பட்ட புள்ளிப்படிவத்தில் பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைகக்கபபட வேண்டும் என்றும் பாடசாலை அதிபர்களை சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி நா. சக்திநாதன் கேட்டுள்ளார். (ப-29)

## 14ஆவது பல்கலைக்கழகம் பதுளையில் அமைக்கப்படும்?

(கொழும்பு)

இலங்கையின் 14 ஆவது பல்கலைக்கழகத்தை பதுளை, மாவட்டத்தில் அமைக்க உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் இந்த பல்கலைக்கழகம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இலங்கையில் அமைந்துள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் போதிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு முற்றிலும் மாறான விடயதானங்களை இந்த பல் கலைக்கழகத்தில் அமுல்படுத்த பல்கலைக்கழக மானிய ஆணைககுழு தீர்மானித்துள்ளது.

ஊவா மாகாணத்திற்கு உட்பட்ட பதுளை, மொனராகலை மாவட்டங்களில் விவசாய வர்த்தக இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மாற்றுத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி அதற்கு மாணவ சமுதாயத்தை ஊக்குவிப்பதுவே இத்தகைய பல்கலைக் கழகம் அமைப்பதன் முக்கிய நோக்கமாகும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள ஊவா, வெல்லச பல்கலைக்கழகத்தின் நிர்மாணப் பணிகள் ஓராண்டுக்குள் பூர்த்திசெய்யப்பட்டு 2006 ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஊவா, வெல்லச அபிவிருத்தி அமைச்சர் விமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

அதற்கமைய பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் இம் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. (க-110)

## பெட்டிகளை விட்டு தனியாக ஓடிச் சென்ற ரயில் என்ஜின்!

(கொழும்பு)

ரயில் பெட்டிகளை விட்டுவிட்டு என்ஜின் மட்டும் தனியாகச் சென்ற சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை களனி ரயில் கடவைக்கு அருகில் நடைபெற்றது.

தெய்வாதீனமாக ரயில் பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகாமல் நின்றன.

கப்ளிங் என்ற ரயிலில் ரயில் என்ஜின் இணைப்பு பகுதி விலகியதாலேயே இந்நிலை ஏற்பட்டது.

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்ட இந்த ரயில் களனி ரயில் கடவை பகுதியால் சென்ற போது என்ஜின் கழன்று ரயில் பெட்டிகள் வேறாகின.

இதனால் பிரயாணிகள் கூக்குரலிட்டனர். ரயில் கார்ட் செய்வதறியாது கலங்கினார். பின்னர் ரயில் என்ஜின் மீண்டும் பின்பக்கமாக ஓடிவந்து ரயில் பெட்டிகளுடன் இணைந்து கொண்டது.

சுமார் 15, 20 நிமிடங்கள் இந்த ரயில் என்ஜினும் பெட்டிகளும் வீதிக் கடவையில் இருந்ததால் களனிப் பக்கமாக கொழும்பு வரும் வாகனங்களும் கொழும்பிலிருந்து களனிப் பக்கமாகச் செல்லும் வாகனங்களும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. (க-10)

## நூல் வெளியீடு

'பொலிகையூர் க. சிந்துதாசனின் " ஓரிடம் " என்னும் கவிதைத் தொகுதி நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இ. அகிலன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் அறிமுகவுரையை இ. இராஜேஸ்கண்ணனும் ஆய்வுரைகளை எஸ். குணேஸ்வரன் மற்றும் இராகவனும் வெளியீட்டு உரையை க. பாலசிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (க-103)

★ ★ ★

(துன்னாலை)

அல்வாய் வடக்கு கதிர்காமு சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக முன்பள்ளி மாணவருக்கான "அரும்புகளின் கீதங்கள்" எனும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டது.

அந்நூலில் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி போன்ற பாடல்களுடன் பறவைகள், மிருகங்கள் மரங்கள் போன்றவற்றுக்கும் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

குறைந்த வரிகளில் நிறைந்த கருத்துக்களுடன் வெளிவந்துள்ள இந் நூல் முன்பள்ளி கூடங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. (ப-101)

## இடமாற்றம்

பனை அபிவிருத்திச் சபையின உற்பத்திபகுதி இல. 53, கண்டி வீதி கச்சேரி யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் மாற்றப்பட்டுள்ளது.

இங்கு விற்பனை செய்யப்படும் ஒடியலகூழ் பிரதி புதன், சனி ஆகிய தினங்களில் வழமை போல் மேற்படி விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ப-130)

## திறப்பு விழா

(மருதங்கேணி)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திசாலையில் நிக்கொட் நிறுவனத்தால் புதிதாக உருவாகப் பட்ட சமையல் கூடம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் அரசாங்க அதிபர் செ. பத்மநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் இவ் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட அதி நவீன இரத்த பரிசோதனை நுண் கருவியின் செயற்பாட்டை காலை 10.00 மணிக்கு யாழ். பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கி. தெய்வேந்திரன் ஆரம்பித்து வைப்பார். (ப-35)

## வாழைகள் முறிந்தன

(இணுவில்)

கடந்த சில நாட்களாக வீசிய காற்றினால் இணுவில் பகுதியில் உள்ள வாழைத் தோட்டங்களில் பல வாழை மரங்கள் முறிந்து வழ்ந்துள்ளன.

இதன் காரணமாக பல விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். (ப-122)

## கடை தீப்பற்றியது

வடமராட்சி வத்தனையில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று மின் ஒழுக்கினால் தீ பற்றி எரிந்துள்ளது. 4 இலட்சம் பெறுமதியான பொருட்கள் சேதமடைந்தன. (ப-28)

## புனரமைப்பு

வடமராட்சி வியாபாரிமூலை அருளம்பலம் சுவாமிகளின் சமாதி தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட சிறந்த சிற்பக் கலைஞர்களினால் மிக துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (ப-28)

## முகிழ்நிலை ஆசிரியர்களின் கவனத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்களுக்குரிய ஒக்டோபர் மாத சம்பளக் கொடுப்பனவுகள் இன்று மு.ப 10.00 மணிக்கு கல்லூரியில் வழங்கப் படவுள்ளது.

எனவே இன்றைய தினம் சகல உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்களும் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க)

## அடிக்கல் நாட்டல்

வவுனியா சேமமடுபடிவம் -2 இல் மீளக்குடியேறிய மக்களின் நன்மை கருதி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் டி.ஆர்.சி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இத்திட்டங்களில் ஓர் அங்கமாக முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 3ஆம் திகதி சேமமடுவில் நடைபெற்றது. இதில் அடிக்கல்லை சேமமடு படிவம் -2 பாடசாலை அதிபர் எஸ்.கந்தவநேசனும் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ப.சதானந்தனும நாட்டி வைத்தனர். முன்பள்ளி சிறார்களும் பெற்றோரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (ப)


## யாழ்.மாவட்டத்தில் கலாசார மண்டபம் நிர்மாணித்தல் கேள்வி அறிவித்தல்

## திருத்தம்

நேற்றைய வலம்புரியில் பிரசுரமாகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் கலாசார மண்டபம் அமைத்தல் தொடர்பான கேள்வி அறிவித்தலில் வேலை விபரம் பற்றிய அட்டவணையில் ஆகக்குறைந்த ICTAD தரம், மீளளிப்புச் செய்யவேண்டிய வைப்புத்தொகை ஆகியன கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு திருத்தப் படுகின்றது.

| வேலை விபரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| யாழ்மாவட்டத்தில் கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணித்தல் | M4 | 312,000/= | 750/= |

நிர்வாக உத்தியோகத்தர்
யாழ்.அரச அதிபருக்காக

(C/679)

# கானல் நீராகும் சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் யுத்தத்தை திணிக்க முயற்சிகள்

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான அடுத்த பேச்சுவார்த்தை கானல் நீராகவே காணப்படுகின்



றது. சமாதான ஆர்வலர்களின் குரல் மெல்ல மெல்ல தேய்ந்து கொணடே போகின்ற அதேநேரம் பேரினவாதிகளின் ஆரவாரங்களும், ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்துக் கொண்டு போகின்றது.

இனவாத ஊடகங்களும் இவற்றிற்கு துணைபோவதுடன் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. புலிகளை பலவீனப்படுத்துவதன் மூலம தமிழ் மக்களது உரிமைகளை வழங்காது விட்டுவிடலாம் என்ற எண்ணமே பேரினவாதிகளின் மனதில் உள்ளது. அத்தோடு புலிகள மத்தியில் பிளவு என பிரசாரம் செய்து மீண்டும் யுத்தத்திற்கு வழிவகுக்க முயற்சிக்கின்றனர். இதற்கு அரசின் தமிழ் சிங்கள ஊடகங்களும் பெரிதும்உதவி செய்கின்றன.

ஆனந்தசங்கரி, கருணா, ஈ.என்டி.எல்.எப். ஆகியோரது கூட்டைப் பற்றித்தான் இனவாதிகள் பெரிதும் பேசுகின்றார்கள். அத்தோடு அயல நாட்டின் ஊடகவியலாளர்களும் இககூட்டை பெரிதும போற்றி புகழ் பாடுகின்றனர். இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்து போடுவதற்காக ஜனாதிபதி இந்தியா செல்லவுள்ள அதேசமயம் இந்திய கடற்படை, இராணுவ தளபதிகள் இலங்கைக்கு விஜயம் செய்த வண்ணமுள்ளனர். இவையெல்லாம் யுத்தத்திற்கான ஆயத்தங்களாகவே புலப்படுகின்றன.

மேலும் இந்திய இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்வதிலும் இலங்கை அரசு பெரிதும் ஆர்வம் காட்டுகின்றது. ஆனால் சமாதான விடயத்தில் அசிரத்தையே காட்டப்படுகின்றது. அரசு, அரசு சார்பான தமிழ் குழுக்களை வைத்து கிழக்கில் மக்கள் மத்தியில் ஒரு பெரும் யுத்த பீதியை இராணுவ உதவியுடன் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே மீண்டும் ஒரு



கலவரத்தை உருவாக்க பேரினவாதிகள் எண்ணம் கொண்டுள்ளனர். சமீபத்தில் பொலநறுவையில் அப்பாவி முஸ்லிம்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்பழியை புலிகள் மீது போடுவதற்கு முயற்சித்தனர். ஆனால் இக்கொலையை செய்தவர்கள் யார் என்பதனை புலிகள் அம்பலப்படுத்திவிட்டனர். இதனால் இப்பேரினவாதிகளின் எணணம் ஈடேறவில்லை. இப்பொழுது வடக்கிலிருந்து கிழக்கை பிரிப்பதற்கு எண்ணம் கொண்டுள்ளார்கள். இதற்கு ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஆதரவு நல்குவது வேதனையான விடயமாகும்.

அண்மையில் தமிழர் கூட்டமைப்பினர் மல்வத்தை பீடாதிபதியை சந்தித்தபொழுது பேரினவாதிகள் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தி கூட்டமைப்பினரது வாகனங்களை தாக்கியதுடன் அஸ்கிரிய பீடாதிபதியுடனான சந்திபபையும் ரத்து செய்ய வைத்தனர். இதன் மூலம் இவர்கள் தமிழ் மக்கள் மீது மீண்டும் யுத்தம் புரிய வேண்டும் என்று ஆதங்கம் கொள்வது புலனாகின்றது. இதேசமயம் தெனனிலங்கை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் மலையக மக்கள் முன்னணியின தலைவர் சந்திரசேகரன் மட்டுமே சமாதானததிற்கான பேச்சுவார்த்தை மீணடும் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கூட்டமைப் பினருடன் சேர்ந்து செயல்படுவது தெரிகின்றது. மற்றைய மலையக கட்சியின் தலைவரும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவிக்கான பேரம்பேசுவதிலேயே காலத்தை செலவிடுகின்றார்கள்.

அறுதிப் பெரும்பான்மையுடன் நடந்து கொண்டிருந்த ஆட்சியை கலைத்த நம் ஜனாதிபதியும் அவரது சகபாடிகளும் மக்களிடம் போலியான வாக்குறுதிகளை வழஙகி ஆட்சி அமைத்தனர். ஆனால இன்று மக்கள் விலைவாசி உயர்வினால் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அவர்களது கோபம் பொய் வாக்குறுதிகளை வழங்கிய ஆளும் கட்சியினர் மீது திரும்பியுள்ளது. இதனை திசை திருபபும் முகமாக அரசு போலியான யுத்த பயத்தை மக்கள மீது திணிக்கப்பார்க்கின்றது. இதன் நிமித்தமே பேரினவாதிகளுக்கும் அரசு சார்பான தமிழ் குழுக்களுக்கும் பின் பலமாக இருந்து விடுதலைப் புலிகளை யுத்தத்திற்கு இழுப்பதற்கான சகல முயற்சிகளையும் செய்கின



றது.

அரசின் இக்கபடவேடம் தமிழ் மக்களுககும் விடுதலை புலிகளுக்கும் தெரியாததல்ல. சமீபத்தில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரை விடுதலை செய்யச் சொல்லி திருகோணமலையில் ஆர்ப்பாட்டமும் உண்ணாவிரதமும் நடத்தினார்கள். ஆனால் விடுதலை புலிகள் அரசு தரப்பிலிருந்த விடுதலை புலிகள் பத்துபேரை விடுதலை செய்த பின்னரே அவர்கள் வசமிருந்த இரண்டு ஊர்காவல் படையினரை விடுதலை செய்தனர். இதன் மூலம் விடுதலைப் புலிகளது மனோதிடத்தைப் புரிந்து கொள்ளலாம். இந்த மனோதிடமே தமிழ் மக்களது பாதுகாப்பு கவசம் என்பதை பேரினவாதிகள் உணர்ந்து தமிழ் மக்கள் மீது யுத்த பீதியை திணிக்காமல் இருப்பது நல்லது.

**நன்றி இணையத்தளம்**

## காத்தான்குடியில் பதற்றம் தணியவில்லை

மட்டக்களப்பு காத்தான்குடியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிமுதல் அமுல்படுத்தப் பட்டிருந்த 24 மணிநேர பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கடந்த புதன்கிழமை காலை 6.00 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க வன்முறைச் சம்பவங்கள் எதுவும் அந்த பிரதேசத்தில் இடம்பெறாத போதிலும் வழமைநிலை அங்கு இதுவரை திரும்பவில்லை. கடைகள், வர்த்தக நிலையங்கள், அரசாங்கக் காரியாலயங்கள், தனியார்துறை நிறுவனங்கள் யாவும் அங்கு மூடப்பட்டிருப்பதாகவும், பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி பிரதான வீதி வழியாக போக்குவரத்து சேவைகள் தடையின்றி இடம்பெறுகின்ற போதிலும் உள்ளூர் போக்குவரத்து சேவைகள் வழமைபோல் இடம் பெறவில்லை. அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவையின் கொள்கையை பின்பற்றும் சுமார் 350 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரம் பேர்வரை இரண்டு பள்ளி வாசல்களில் தஞ்சம் பெற்றுள்ளார்கள்.

இன்னும் சில குடும்பங்கள் அயல் தமிழ் கிராமமான ஆரையம்பதியல் தஞ்சம் புகுந்துள்ளனர். பலவந்தமாக தமது பள்ளிவாசல்களுக்கு அழைத்துச்செல்லும் எதிரத் தரப்பினர் அங்கு கலீமா (மன்னிப்பு) கோரி சுன்னத்துல் ஜமா அத்மதக் கோட்பாட்டை பின்பற்றுமாறு தமது தரப்பினரை வற்றுபுறுததுவதாகவும், தமது தீரப்பில் இணைந்து கொள்ளுமாறு அவர்களை அச்சுறுத்துவதாகவும் அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப பேரவையைச் சேர்ந்த உலமாக்கள் குற்றம் சுமத்துகின்றார்கள். (க)

## பாடசாலைகளின் அடிப்படை தரவுகள் கோரப்படுகின்றன

பாடசாலைகளின் அடிப்படைத் தரவுகளை திரட்டி ஒவ்வோர் சுகாதார வைத்திய அதிகாரிகளையும் சிபார்சு செய்து அனுப்புமாறு குடும்ப சுகாதாரப் பணியக வைத்திய அதிகாரி சகல பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளையும் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அடுத்தவருடம் மாணவர் தொகைக்கு அமைய பாடசாலைகளில் மலசலகூடம், குடி நீர் குழாய்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அத்துடன் பாதுகாப்பான சுகாதார சேவைகளை பாடசாலையில் மேற்கொள்வது அவசியம எனவும் அவர் கூறியுள்ளார்.

எனவே தற்போதுள்ள மாணவர்களின் தொகையின்படி சலகூடம், மலகூடம், குப்பை அகற்றும் முறைகள், குடிநீர்பெறும் கிணறுகளின் விபரங்கள் போன்றவற்றை விரைவில திரட்டி தனக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும் அக்கடிதத்தில் மேலும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப-7,252)

## தீவிரவாதிகளிடமுள்ள இலங்கையரை மீட்கத் தயார் என்கிறார் ஜயலத் எம்.பி.

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இலங்கையரை விடுவிப்பதற்கு அரசாங்கம் உருப்படியான நடவடிக்கை எதனையும் செய்யவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, அந்நபரை விடுவிப்பதற்கு தாம் ஈராக் செலலத் தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளா.

தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பணயம் வைக்கப்பட்டுள்ள இலங்கையரை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பேச்சளவில் கூறப்படுகின்றதே தவிர செயலளவில் எதுவும் நடக்கவில்லை. இதனால்தான் ஈராக் சென்று தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள இலங்கையரை மீட்கப்போவதாக ஜயலத் ஜயவர்த்தன மேலும தெரிவித்துள்ளார்.


இதேவேளை, டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பியின் இத்தகைய குற்றச்சாட்டை பிரதி வெளிவிவகார அமைச்சர் முற்றாக மறுத்துள்ளார்.

அரசாங்கம் தீவிரவாதிகளுடன சுமுகமான முறையில் பேச்சு நடத்தி இலங்கையரை விடுவிக்க குறிப்பாக அவரது உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது மீட்பதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (க)

## சிறுபான்மை மக்களின் உணர்வுகளை இந்தியா அலட்சியம் செய்யக்கூடாது

### பெ.சந்திரசேகரன் வேண்டுகோள்

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதென்ற செய்தி ஏற்கனவே யுத்த பீதியில் உள்ள சிறுபான்மை மக்களின்



கவனத்தை ஈர்க்கும் செயலாகுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் புதுடில்லியில் இருந்து வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சமபலத்தில் இருந்து கொண்டு பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் இலங்கை அரசு சமாதான பேசசுவார்த்தையை பிற்போட்டு வருகின்ற சூழலிலும், இராணுவத்தை பலப்படுத்தும் வகையில், இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் அமைந்து விடுமோ என்ற அச்சமும் ஏற்படு கின்றது.

இந்நிலையில் 50 வருடகால வரலாற்றைக் கொண்டுள்ள சிறுபான்மை மக்களின் போராட்டத்தை இந்திய அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லையோ என்று அர்த்தமாகிவிடக்கூடாதென குறிப்பிட்டுள்ள சந்திரசேகரன், சமாதானம் முறிவடைந்து யுத்தம் ஒன்று தோன்றிவிடக்கூடாதென்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து மக்கள் மத்தியிலும் இந்த பாதுகாப்பு ஒப்பந்தம பயங்கர அச்ச உணர்வையே ஏறபடுத்தும் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும இலங்கை சிறுபான்மை மக்களின் மீது முழுமையாக அக்கறை காட்ட வேண்டிய இந்தியா இம்மக்களின் உணர்வுகளை எந்த வகையிலும் அலட்சியம் செய்யக்கூடாதென மலையக மக்கள் முன்னணி கேட்டுக்கொள்வதாகவும், இலங்கை சிறுபான்மை மக்களின் பிரச்சினையில், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்களின் பிரச்சினையிலும் இந்தியா தற்போதைய சமாதான நகர்வுகளுக்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டுமெனவும் மலையக மக்கள் முன்னணி இந்திய அரசாங்கத்தை வேண்டுகின்றது என அந்தஅறிக்கையில் சந்திரசேகரன மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-8)

## சமாதானத்தை உருவாக்கும் பின்னணி குறித்து சிவில் சமூகக்குழு ஆராய்வு

(கொழும்பு)

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனை சபையின் சிவில் சமூகக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சிவில் சமூகத்தவரை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தச்சட்டத்தில கலந்துகொண்ட பிரதிநிதிகள் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கான பின்னணியை தயாரிப்பது குறித்து கவனம் செலுத்தினர்.

நேற்று முன்தினம் சிவில் கழகக் குழுவுக்கு கலாநிதி ஏ.ரி.ஆரியரததின தலைமை தாங்கினார். அமைதி நடவடிக்கைகள் மூலம மோதலை தவிர்த்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி செய்தல், அரசியல் மறு சீரமைப்பு, மனித உரிமை மீறல உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்தக்குழுவின் ஊடாக எடுக்கப்படும் தீர்மானங்கள் பிரதான சபையான சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைசபை பேரவையில் விரிவான விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை, தேசிய ஆலோசனை சபை அரசியல்குழு, சமயக் குழு, சிவில் சமூகக்குழு என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-8)


## தவறிவிட்டது

மூக்குக்கண்ணாடி, திறப்புக்கோர்வை மற்றும் ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிறக் கைப்பை யாழ்.நகர்ப் பகுதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல.127, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ரூபா.10,000/= சன்மானம் வழங்கப்படும். T.P:021 222 7242

(8977)


## புங்கங்குளி மக்களின் அவலம்

(பொன்னாலை)

அராலி மேற்கு-புங்கங்குளி கிராமத்திற் நிரந்தர வீதியொன்று இல்லாது மக்கள் தவித்து வருகின்றனர்.

கோடை காலங்களில் குள வாய்க்கால்களையும்-வயல் வரம்புகளையும் தமது போக்குவரத்துப் பாதையாக பாவித்துவரும் இப் பகுதி மககள், மாரிகாலமானதும் குளங்கள, வலயல்கள், வாய்க் கால்கள் மழை வெள்ளங்களால் நிரம்பி விடுவதால இக்கிராம மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது குறித்து வலிகாமம் மேற்கு பிரதேசசபை செயலகம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இக்கிராம மக்கள் தமது பிரச்சினைகளை தெரிவித்திருந்தும் எதுவித நடவடிக்கையும் இன்னமும் எடுக்கப்படவில்லை என்றும் விசனம் தெரிவிக்கின்றனர். (49)

## இன்று ஒரு தகவல்

# ஞாபக சக்தி

நேற்று வரையில் நம்முடனேயே இருந்திருப்பான். இன்று அவனுக்கு திடீரென்று பணம், பதவி, புகழ் இந்த மூன்றில் ஏதாவது ஒன்று கிடைத்திருக்கும். நாளைக்கு அவன் முன்னால் போய் நில்லுங்கள்." யார் நீங்கள்! உங்களை எங்கேயோ பார்த்தது போலிருக்கிறதே?" என்று சொல்வான். பொதுவாகப் பலரிடம் இருக்கின்ற இயல்பு இது.

ஞாபகமறதியையும் பெரிய மனிதனுக்கு ஒரு அடையாளமாகச் சொல்வது வழக்கமாகிவிட்டது. சில பேரிடம் அது இயல்பாகவே இருக்கும். அதை நாம் குறையாக சொல்வதும் தவறு. அபாரமான ஞாபக சக்தியுள்ள அறிஞர்களும் உள்ளனர். கவிஞர்களும் உள்ளனர்.

கவிஞர் பைரன் இருந்தாரல்லவா? எவ்வளவோ கவிதைகள் எழுதினார். அதில் எதை வேண்டுமானாலும் எந்த சமயத்தில் கேட்டாலும் ஒரு சிறு தவறு கூட இல்லாமல் ஒப்பித்து விடுவாராம். ஆனால்.... வால்டர் ஸகொட் என்ற கவிஞர் அதற்கு நேர்விரோதம். ஒரு சமயம் பைரன் எழுதிய கவிதை என்று நினைத்துக் கொண்டு அவரது சொந்தக் கவிதையையே மிகவும் புகழ்ந்து பாராட்டி பேசிக் கொண்டிருந்தாராம். அந்த அளவிற்கு ஞாபகமறதி.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தாரே தியோடர் ரூஸ் வெல்ட் அவருக்கு ஞாபகசக்தி மிகவும் அதிகம். பல பேரைச் சந்திக்க வேண்டும், பேச வேண்டும் என்ற ஆர்வம் உடையவர் அவர். அவர்யாரைச் சந்தித்தாலும் சரி அவரது பழக்க வழக்கம், அடையாளம் போன்றவற்றையெல்லாம் நன்கு கவனித்து மனதில் பதிய வைத்துக்கொள்வாராம். இது அரசியலில் அவருக்கு மிகவும் உதவியாக இருந்திருக் கிறது. இரண்டாவது முறை அவர் யாரையாவது சந்திக்கும் போது மிகவும் வேண்டப்பட்ட வரை கூப்பிடுவது போல் பேர் சொல்லிக் கூப்பிடுவாராம்.

ஒருமுறை ஜப்பானிய வங்கிகளின் அதிபர் ஒருவரைச் சந்தித்திருக்கிறார். 15 வருடங் களுக்கு முன்பு அவர்கள் பேசிக் கொண்டி ருந்த விஷயத்தைத் தொடர்ந்து பேசினாராம் ரூஸ்வெல்ட். அதிபர் அசந்து போய் விட்டாராம். அவருக்கு எப்படி அந்த ஞாபக சக்தி வந்தது. அவர் மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கு நன்கு பழகியிருந்தார்.

ஒருமுறை பிரேசிலுக்குப் போயிருந்தார். ஒரு மரத்தடியில் அமர்ந்து இப்பன் எழுதிய "ரோம் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி" என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தார். அதிலேயே லயித்துப் போய்விட்டார். சிறிது நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அது கூடத் தெரியாமல் இவர் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே படித்துக் கொண்டிருந்தாராம். மனதை அந்த அளவுக்கு ஒருமுகப் படுத்தக் கூடியவர் அவர். அது தான் அவரது ஞாபக சக்திக் குக் காரணம்.

சேர் பிரான்சிஸ் பேக்ன் எப்படி தெரியுமா? தனது பிரபலமான புத்தகங்களில் ஒன்றை ஞாபகத்தில் இருந்து சொல்லியே எழுதி வைத்தாராம். நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் இருந்தாரே அவருக்கு மறதி அதிகம். கார்லைஸ் ரொபின் என்பவர் அவரிடம் அந்தரங்க காரியதரிசியாக ஏழு வருடங்கள் வேலை செய்தார். எப்போதும் சார்லிசாப்ளினுடனேயே இருந்தவர் அவர். அப்படி இருந்தும் அவரது முழுப் பெயரும் கடைசியில் சார்லிசாப்ளினுக்கு நினைவுக்கு வரவில்லையாம்.

எது எப்படியிருந்தாலும் நம்மைப் பொறுத்த வரைக்கும் நாம் ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்வது தான் நல்லது. மனதை ஒருமுகப் படுத்தப் பழக்கிக் கொள்வது தான் அதற்குச் சிறந்த வழி.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து நீதிபதியிடம் ஆலோசனை பெறுவார்; தேர்தல் ஆணையாளர்!

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து, தேர்தல் ஆணையாளர் எதிர்காலத்தில் நீதிபதியின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என ஆளும் கட்சியும், ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடாத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சியும் தெரிவித்து வருகின்றன.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தேர்தல் செயலகத்தின் அதிகாரி ஒருவர், எவ்வாறாயினும் அரசியலமைப்புச் சட்டத்தின் 30,31 ஆம் சரத்துக்களுக்கமைய தேர்தல் நடைபெறும் தினம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் பதிவு செய்யப்படவேண்டிய தினம் என்பன தேர்தல் ஆணையாளராலேயே தீர்மானிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த விடயம் அரசியலமைப்புச் சட்டத்தின் 30 ஆம் சரத்தின் 5ஆம் பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், நீதிபதியின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தேர்தல் நடைபெறும் திகதி மற்றும் வருடம் தொடர்பாக அறிவிக்கவுள்ளதாகவும், தேர்தல் செயலகத்தின் அந்த அதிகாரி மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

(க)

# மார்க்க ரீதியான பிணக்குகளைத் தீர்க்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## அம்பாறை அரசியல்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் முஸ்லிம்களிடையே உருவாகியுள்ள அமைதியற்ற சூழ்நிலை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை கவலை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அறிக்கையொன்று வெளியிடப் பட்டுள்ளது. காத்தான்குடியில் முஸ்லிம் சமூகத்திறகிடையே ஏற்பட்டமார்க்க ரீதியான பிரச்சினை அதன் பின்னர் இடம்பெற்ற துரதிஷ்டவசமான சம்பவங்கள மிகவும் வேதனையைத் தருகின்றது.

இந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறான மார்க்க ரீதியான சம்பவங்களை மேலும் வளர்த்து ஒரே இனத்திற்குள் குரோதங்களையும் பகைமை உணர்வையும் ஏற்படுத்தாது சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் கலந்தாலோசனைகளை மேற்கொண்டு ஒரு சுமுகமான இணக்கத்திற்கு வரவேண்டியது ஆரோக்கியமானதாக அமையும்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து மத ரீதியான பிணக்குகளுக்குத் தீர்வுகாணுமாறும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்புடன் கேட்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

# இராசி பலன்

**06.11.2004**

**(ஐப்பசி 21, சனிக்கிழமை)**

**நவமி மு.இ 11.16 மணிவரை**

**ஆயிலியம் காலை 06.55 மணிவரை**

**இராகுகாலம் 9.05-10.35 மணிவரை**

**சுபநேரம் 03.05- 4:35 மணிவரை**

**கௌரி விரதம் 15ஆம் நாள்**

**மேடம்** மனச்சோர்வு, வியாபார விருத்தி, சொத்துக்களால் கவலை, பணவிரயம்.

**இடபம்** உடல் நலக்குறைவு, கௌரவக் குறைவு, வேலைச்சுமை, காரியதாமதம்.

**மிதுனம்** நற்கீர்த்தி, தேகநலன், எடுத்த காரியம் கைகூடும், தனலாபம்.

**கடகம்** அதிகசெலவு, மனோசங்கடம், போசனசுகக்குறைவு, முயற்சிதாமதம்.

**சிங்கம்** வெகுமானம், சயனசுகம், கலந்துரையாடல், தொழில் சிந்தை.

**கன்னி** சோம்பல் நிலை, உறவினர் மனஸ்தாபம், பிரயாணம், சுபசெலவு.

**துலாம்** சயனசுகம், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, காரியசித்தி.

**விருச்சிகம்** எடுத்தகாரியம் கைகூடும், பிறருக்கு உதவிசெய்தல், உடல்நலம் அதிகாரம்.

**தனுசு** உத்தியோக பங்கம், தேசாந்திரவாசம், எதிர்பாராத செலவு, புதிய முயற்சி.

**மகரம்** அஜீரணக்கோளாறு, பொருள் விரயம், மனப்பயம், கௌரவக்குறைவு.

**கும்பம்** மனோதைரியம், கீர்த்தி, பிரயாணம், காரியஅனுகூலம்.

**மீனம்** நோய் குணப்படுதல், தொழில் சிந்தை, நண்பர் உதவி, மனமகிழ்ச்சி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழக்கிறது ஜாதிக ஹெல உறுமய?

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் தேர்தலொன்று இடம்பெறுமாயின், ஜாதிக ஹெல உறுமய அந்தத் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தக் கட்சியின் செயலாளர் பதவிக்காக இருவருடைய பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் ஜாதிக ஹெல உறுமயவில உட்கட்சி முரண்பாடுகள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து, இந்தக் கட்சியை முரண்பாடுகளுடைய கட்சியாகப் பிரகடனப்படுத்துவதற்குத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தீர்மானித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பதவிக்கு சிஹல உறுமயவின் உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் பெயரும், கொடபொல அமரகீர்த்தி தேரரின் பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதனையடுத்தே இந்தக்கட்சி, உட்கட்சி முரண்பாடுகளைக் கொண்ட கட்சிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள தாகவும் தேர்தல் செயலக வட்டாரங் கள் மூலம் தெரிய வருகிறது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான உயர்மட்டக் குழுவின் கூட்டம் ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# பாலம்போட்டாறுப் பகுதியில் புலிகளின் முகாம் எதுவுமில்லை

## எழிலன் தெரிவிப்பு

(திருகோணமலை)

பாலம்போட்டாறுப் பகுதியில தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் இருந்ததாகவும், அதனைத் தாங்கள் அழித்ததாகவும் கடற்படை தெரிவிக்கும் செய்தியானது ஒரு திட்டமிட்ட கட்டுக் கதையாகும் என திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் திருமலைத் துறைமுகத்தைச் சுற்றிவர முகாம்களை அமைத்திருக்கிறார்கள் என்று அரசு சார்பாக பரப்பப்பட்ட செய்தியை உண்மையாககுவதற்காகவே இவ்வாறான சோடனையை கடற்படை மேற்கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். பாலம்போட்டாற்றில் விடுதலைப் புலிகளின் முகாம் இருந்ததாகவும் அதனைத் தாங்கள் அழித்ததாகவும் கடற்படையினர் மேற்கொண்ட பிரசாரத்தைப் பற்றிக் கேட்ட போதே எழிலன் மேற்கண்டவாறு இதனைத் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்போ அல்லது பின்போ தங்களது முகாம் மேற்படி பகுதியில் அமைந்திருக்கவில்லையென்பதை தாங்கள் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தொிவித்த எழிலன் கண்காணிப்புக் குழு கூட இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதாகத் தமக்கு எந்தப் பொழுதிலும் அறிவிக்கவில்லையென்பதையும் சுட்டிக் காட்டினார்.

இதுவே கடற்படை திட்டமிட்ட வகையில் பொய்ப் பரப்புரையை மேறகொள்வதை எடுத்துக் காட்டுகின்றது. திருமலைத் துறைமுகத்தைச் சுற்றி புலிகளின் முகாமகள இருப்பதான செய்தியில் உண்மைத்தனமையில்லை என கண்காணிப்புக்குழு சமீபகாலத்திற்கு முன்னர் அறிவித்ததும், அதனை அரச சார்பானவர்கள் ஆட்சேபித்ததும் கருத்தில் கொள்ளக் கூடியதொன்றாகும் எனஅவர் மேலும கருத்துரைத்தார். (க-121)

# சிறுவர் அரங்கம்



# பனி ஏன் வெண்மையாக உள்ளது?

உறைந்த தண்ணீர் தான் பனி எனப்படுகிறது. வாயுமண்டலத்திலுள்ள நீராவி உறையும்போது ஒளியூடுருவும் தன்மையுள்ள பரல்கள் உருவாகின்றன. இப்பரல்கள் வேகமான காற்று வீச்சினால் வாயு மண்டலமெங்கும் சிதறடிக்கப்படுகின்றன. இவை மேலும், கீழும் பாயும்போது இன்னும் அதிகமான பனிப்பரல்கள் உண்டாகின்றன. இவை ஒன்று சேர்ந்து ஒரே பனிப்பாறையாக உருக்கொண்டு பூமியில் வந்து விழுகின்றன.

பனிப்பாறைகள் பல உருவுடையவை. பொதுவாக அறுகோண வடிவுடைய இப்பனிப்பாறைகள் தட்டையாகவோ, ஊசிபோன்று கூர்மையாகவோ, நட்சத்திரம் போன்ற அமைப்பிலோ இருக்கும். இரண்டு பனிப்பாறைகள் ஒரே உருவத்தில் இருக்காது என்பது விந்தையான உண்மை.

பளிங்குபோன்ற பனிப்பாறைகள் மீது சூரியஒளி விழும்போது இவற்றின் ஒவ்வொரு கோணமும் எதிரொளிக்கிறது. பல திசையிலிருந்து மாறி மாறி வரும் எதிரொளிப்புக் காரணமாக பனிப்பாறை வெண்மையாகக் காணப்படுகிறது.

கடையில் விற்கப்படும் பனிக்கட்டி, தண்ணீரை உறையவைத்துச் செய்யப்படுகிறது. அதனால் இதற்குப் பரல் அமைப்புக் கிடையாது. இதனுடைய எதிரொளிப்பின் தன்மையும் வேறானது. அதனால் தான் இது நிறமின்றியும், ஒளியூடுருவும் தன்மையுடனும் காணப்படுகிறது.

மலை மீது படியும் பனி ஆறுகளில் பெருக்கெடுத்து ஓடும் நருக்குக் காரணமாகிறது. இங்கு சேர்ந்து கிடக்கும் பனி கடுங்குளிர்காலத்தில் நிலத்தினடியில் ஈரப்பதமாக நிற்கிறது.

புதிதாக விழும் பனி சூரியஒளியின் 95சதவீதத்தை எதிரொளித்து விண்வெளிக்கே திருப்பி அனுப்பிவிடுகிறது. குளிர்கால இரவில் வெப்பநிலை வெகுவாகக் குறைந்து விடுவதற்கு இதுவே காரணம்.

## மழை



மழை மழை
மழை மழை
பொழியுது பார்
வையகம் சிறக்கப்
பொழியுது பார்
வானில் இருந்து
பொழியுது பார்
நிலத்தில் விழுந்து
ஊறுது பார்
ஊறிய உடனே
ஓடுது பார்
சரிவை நோக்கி
ஓடுது பார்
பள்ளம் சென்று
நிறையுது பார்
பார்க்க அழகாய்
இருக்குது பார்
கப்பல் செய்து
விட்டுப் பார்
தானாய் ஓடும்
உற்றுப் பார்
காற்றும் குளிர்ந்து
வீசுது பார்
உடம்பும் குளிர்ந்து
போகுது பார் - (மழை)

-செம்பியன் செல்வி

## கணக்குப்புதிர்

ஒரு பெரிய சுவர் கடிகாரம் நிலத்தில் விழுந்து 3 துண்டுகளாக உடைந்துவிட்டது. ஆச்சரியம் என்னவென்றால் உடைந்த மூன்று துண்டுகளின் கூட்டுத்தொகை ஒரே தொகையாக 3 உடைந்த துண்டுகளிலும் இருந்தது. அப்படியாயின் எப்படி மூன்று துண்டுகளாக உடையும்?

# யார் முட்டாள்


சந்திராபுரி என்ற நாட்டை சந்திரவர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். மன்னனுடைய அரண்மனையிலே வேலன் என்னும் ஒருவன் பணியாளனாக இருந்தான். அரசனுக்கு வேலனை மிகவும் பிடிக்கும். ஆனால் வேலன் ஒரு விந்தையான பேர்வழி.

அரசன் வேலனிடம் எந்த வேலையைச் சொன்னாலும் மறுபேச்சுப் பேசாமல் செய்ததேயில்லை. அநாவசிய சந்தேகங்களை எழுப்பி அரசனைக் குழப்புவது அவன் வழக்கம்.

ஒருநாள் அரசன் வேலனிடம், "வேலா! பாளையங்கிரியில் வசிக்கும் என் நண்பனான இந்திரனிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்து விட்டு அவர் தரும் பதிலை வாங்கிவா" என்று கூறி ஒரு கடிதத்தை ஒப்படைத்தார்.

உடனே வேலன் "மன்னா, அவர் அங்கே இல்லாவிட்டால் என்ன செய்வது? வெளியூர் சென்றிருந்தால் நான் அங்கேயே தங்கியிருந்து பார்த்து வருவதா? அப்படியானால் நான் எத்தனை நாள் தங்குவது? என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றான்.

இதனைக்கேட்ட அரசனுக்கு வேலன் மீது மிகுந்த கோபம் ஏற்பட்டது. அவனை வேலையை விட்டு நீக்கி விடலாமா என்று கூட யோசித்தார். பின்னர் வேலனின் நேர்மையான குணம், உண்மையான உழைப்பு ஆகியவற்றை நினைத்து தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.



வேலனை எப்படியாவது திருத்தவேண்டும் என்று எண்ணிய அரசன், 'இவன் ஒரு முட்டாள்' என்று எழுதிய அட்டையை வேலனின் கழுத்தில தொங்கவிடுமாறு உத்தரவிட்டார். ஆனால் அவ்விதம் செய்தும் வேலனின் குணத்தை மாற்றவே முடியவில்லை. அட்டையும் கழுத்தில் தொங்கியபடியே காலம் சென்றது.

அரசனுக்கும் வயதாகி விட்டது. திடீரென ஒரு நாள அரசன் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டார். அவருக்குச் செய்யப்பட்ட எந்த வைத்தியமும் பலனளிக்கவில்லை.

மந்திரிகள், தளபதிகள், நாட்டு மக்கள், அண்டைநாட்டு அரசர்கள் எனப் பலர் வந்து அரசரைப் பார்த்து, ஆறுதல் சொல்லிவிட்டுச் சென்றனர்.

1619 ஜூனில் தமிழ் ஈழம் அடிமை நாடாகியது. தமிழ் ஈழத்தின் இறைமை போர்த்துக் கேயரிடம் சென்றடைந்தது.

சங்கிலி மன்னன் சிறைப்பிடிக்கப்பட்ட பொழுது அவன்வாள் அவனுடன் இல்லை. சங்கிலி மன்னனின் வலிவு ஆணைக் கருவியான வாள் இன்றும் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் உள்ளதாகக் கூறுவர்.

சங்கலி மன்னன் கொழும்பில் இருந்து இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள கோவாவிற்குக் கொண்டு செல்லப்பட்டான். தமிழ் ஈழத்தைப் பாதுகாக்க முயன்றமைக்காகத் தமிழ் ஈழ மானம் காத்த பணிக்காக அவன் பெற்ற பரிசு தூக்குத் தண்டனை. கோவாவில் நீதிமன்றத்தில் இராஜத் துரோகக் குற்றத்துக்காக விசாரிக்கப்பட்ட போதும் வீரனாக நின்றான். தமிழரின் மான உணர்வுக்கு எடுத்துக் காட்டாக நின்றான். தமிழுக்காகத் தமிழரசுக்காகச் சுடுகாடு செல்வதானால் அச்சுடு காடும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக அமையும் எனக் கருதினான்.

ஒலிவேரா யாழ்ப்பாணத்தின் படைத்தலைவனானான். போர்த்துக்கேய மன்னன் தமிழ் ஈழ அரசின் மன்னனானான். சங்கிலி மன்னனிடம் இருந்த இறைமையும் ஆட்சியுரிமையும் போர்த்துக்கேய மன்னனுடையதாயிற்று.

## வரலாற்றில் தமிழ் ஈழம்

ஈழத்துப் பூதந்தேவனாரின பாடல்கள் சங்கத் தமிழ் இலக்கியங்களில் உள்ளன. அகநானூற்றில் மூன்று பாடல்கள், குறுந்தொகையில் மூன்று பாடல்கள், நற்றிணையில் ஒரு பாடல் ஆக ஏழு பாடல்கள் உள்ளன. ஈழத்துப் பூதந்தேவனார் காலத்தில், ஏறத்தாழ இரண்டாயிரமாண்டுகட்கு முன், தமிழ் ஈழத்தில் அகவாழ்வு அமைந்த வண்ணத்தை அவர் பாடலில் காணலாம்.

இரண்டாயிரத்து நூற்றி முப்பது ஆண்டுகட்கு முன்பு, தமிழ் மன்னன் எல்லாளன் இலங்கையை ஆட்சி செய்தான். அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். நாற்பத்து நான்கு ஆண்டுகள் (கி.மு. 161 - 117) ஆட்சி செய்த எல்லாள மன்னன் நல்லாட்சி செய்தான். தமிழ் மக்கள், சிங்கள மக்கள் இரு சாராரையும் சமமாக மதித்து, உயர்ந்த கோட்பாடுகட்கு அமைய ஆட்சிசெய்தான் எனச் சிங்கள வரலாற்று நூல்கள் எல்லாள மன்னனைப் பாராட்டுகின்றன.

சிங்களச் சிற்றரசன் துட்டகைமுனு எல்லாளனுக்கு எதிராகப் படையெடுத்தான். எல்லாளனின் படைகள் சிங்களப் படைகளைச் சிதறடித்தன. துட்டகைமுனு சூழ்ச்சி செய்தான். துட்டகைமுனு எல்லாளனை நேருக்கு நேர் தனியாகச் சமரிட அழைத்தான். தனிச்சமரில் எல்லாளன் தோல்வியுற்றான்.

தனது தனிப்பட்ட வீரம், வெற்றி என்பனவற்றுடன், தமிழ் ஈழக் குடிமக்களின் வீரம், வெற்றி நல்வாழ்வு என்பனவற்றைத் தொடர்பு படுத்தியமையால், எல்லாளனின் தனிச் சமர், தமிழ் ஈழ மக்களின் தோல்வியாயிற்று. தமிழ் அரசு தோல்வியுற அநுராதபுரத்தில் சிங்கள அரசு எழுந்தது.

போரில் தோற்ற மாவீரன் எல்லாளனுக்கு துட்டகைமுனு நினைவுச் சின்னம் அமைத்தான். அந்த வழி செல்வோர் அந்த நினைவுச் சின்னத்துக்கு மரியாதை செய்யப்பணித்தான்.

எல்லாளனின் தோல்விக்குப்பின் சில காலம் சிங்கள மன்னர்கள் தீவு முழுவதையும் ஆட்சி செய்தனர் எனினும் மீண்டும் பாண்டிய மன்னரின் உதவியுடன், தமிழர் ஆட்சி (கி.மு.103) தமிழ் ஈழத்தில் அமைக்கப்பட்டது.

தமிழக அரசுகளான சேர, சோழ, பாண்டிய அரசுகள் தமிழ் ஈழ அரசுடன் தொடர்புகள் கொண்டிருந்தன. சிங்கள அரசிடமும் தொடர்புகள் கொண்டிருந்தன. பத்தாம் நூற்றூண்டில் சோழ அரசு, பேரரசாகத் துளிர் விட்டு வளர்ச்சியடையத் தொடங்கியது. சோழப் படைகளால் பாண்டிய அரசு கைப்பற்றப்பட்டபொழுது, பாண்டிய மன்னன் தனது முடியையும் சிங்காசனத்தையும் சிங்கள மன்னனிடம் அடைக்கலம் கொடுத்தான். சோழர் சினங் கொண்டனர்.

தமிழக அரசுகளிடையே வேறுபாடுகள் எழலாம். அதிலே தலையிடச் சிங்கள அரசுக்கு உரிமை கிடையாது. பாண்டிய மன்னனின் முடியைச் சிங்கள அரசிடம் விடுவதா?

## தமிழ் உலகின் பொற்காலம்

சோழர் இலங்கை மீது படையெடுத்தார்கள். கி. பி. 993 இல் இராஜ இராஜ சோழன் படைகள் இலங்கை மீது படையெடுத்தன. அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சிங்கள மன்னனைப் போரில் புறமுதுகு காணச் செய்தனர். அநுராதபுரத்தைத் தீக்கிரையாக்கினர். இலங்கையின் வடபகுதியைச் சோழப் பேரரசின் மண்டலங்களுள் உள்ளாக்கினர். மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிட்டனர். ஜன நாதமங்களத்தை (பொலன்னறுவை)த் தலைநகராக அமைத்தனர். சோழ அரச குடும்பத்தைச் சார்ந்த ஒருவனை ஆட்சித் தலைவனாக்கினர்.

தீவின்தென் பகுதியில் ஐந்தாம் மகிந்தன் தொடர்ந்தும் ஆட்சி செய்தான். இராஜ இராஜ சோழனின் மகன் இராஜேந்திரன் காலத்தில் கி.பி. 1017- இல் சோழப் படைகள் தெற்கிலங்கைக்குச் சென்று சிங்கள மன்னனைப் போரில் தோற்கடித்து இலங்கைத் தீவு முழுவதையும் தமிழரின் ஆட்சிக்குள் கொணர்ந்தனர்.

ஜயங்கொண்ட சோழ மூவேந்த வேளாளர் தலைமையில் வந்த சோழப்படைகள், சிங்கள மன்னனாகிய ஐந்தாம் மகிந்தனையும், மன்னர் குடும்பத்தையும் சிறைப்படுத்தினர்.

ஒரு நூற்றாண்டுக்கு முன் பாண்டிய மன்னன் மூன்றாம் இராசசிம்மன் தனது முடியைச் சிங்கள மன்னனிடம் விட்டு வைத்திருந்தான். முதலாம் இராஜேந்திர சோழன் அந்த முடியையும் முடியை வைத்திருந்த ஐந்தாம் மகிந்தன் மன்னன் குடும்பத்தையும் கூண்டோடு கைப்பற்றினான். சோழநாட்டிற்குத் தருவித்தான்.

தமிழரின் ஆட்சியிலே, ஏராளமான தமிழ் மக்கள், தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துக்கு வந்தனர். ஏற்கனவே வாழ்ந்த தமிழர்களின் எண் ணிக்கையைப் பெருக்கினர். இலங்கையின் கரையோரமெங்கும் வாழ்ந்தார்கள். மலை நாட்டையும் தெற்கே உரோகணத்தையும்தவிர்ந்த ஏனைய பகுதிகள் தமிழ்ப் பகுதிகளாக இருந்தன.

சோழர் ஆட்சிக் காலத்தில் தமிழரின் பண்பாடும் வாழ்வு முறைகளும், தமிழ் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சிறப்பாக இருந்தன. இதனால் தான், சோழர் காலம் தமிழுலகின் வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## நிதி ஒதுக்கீடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையம், அம்பாள் விளை யாட்டுக்கழகம் ஆகியவற்றிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பாரதி சனசமூக நிலையத்திற்கு 2 லட்சம் ரூபாவும், அம்பாள் விளையாட்டுக் கழகத்திற்கு 96ஆயிரம் ரூபாவும் மாவைசேனாதிராசா, ஈழவேந்தன் ஆகியோரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ப-126)

## காணி வழங்கப்பட்டது

(பருத்தித்துறை)

வீதிகள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பருத்தித் துறைக்கான நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவல கத்தை அமைப்பதற்கென புலோ லியில் 4 பரப்பு அரசாங்கக் காணி வீதி அபிவிருத்தித் திணைக்களத்திறகு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண காணி ஆணையாளரின் பணிப்பின் பேரில் புலோலி கமநலச் சேவை நிலையத்திற்குப் பின் புறமாகவுள்ள இக் காணியைப் பருத்தித்துறைப் பிரதேச செய லர் வீதி அபிவிருத்தித் திணைக் களத்திற்குக் கையளித்துள்ளார்.

இக் காணியினுள் வீதி அபிவிருத்தித் திணைக்கள பருத்தித் துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் நிர் மாணிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ப-52)

## ஒலிபெருக்கி உபகரணங்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெணகள் உயர்தரப் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கி உபகரணங்கள் அன்பளிபபாகக் கிடைத்துள்ளன.

கனடாவில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவி திருமதி. ஜோதி மலர் முகுந்தன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி. சு.பா. சுப்பிரமணியத்தினூடாக இவ் ஒலிபெருக்கி உபகரணங்களைப் பாடசாலைக்கு வழங்கியுள்ளதாக அதிபர் திருமதி. எஸ்.சுந்தரேசன் தெரிவித்தார். (ப-52)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் மன்ற சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த மாதம் 31 ஆம் திகதி நிலையக் கட்டடத்தில் இடம்பெற்றது.

அதன்படி தலைவராக ச. பிறேமதாசனும் உபதலைவராக கி. புஸ்பலிங்கமும் செயலாளராக இ.ஜெகனும உபசெயலாளராக ஆ. கேசவனும் பொருளாளராக கோ. தவக்குமாரும் தெரிவு செய்யப்பட்டார்கள். (க-10)

## கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

அகில இலங்கை இஸ்லா மிய மெய்ஞானப் பேரவை தலை வர் அப்துல் ரவூப் மௌலவியின் சகோதரியின் வீடு மீது கடந்த புதன் கிழமை மாற்று மதப் பிரிவினரால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவரது சகோதரியான பசீரா உம்மா தவ் பீக் காத்தான்குடி பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளார்.

இச்சம்பவத்தின் போது அவ ரும் அவரது பிள்ளைகளும் வீட்டில் இருந்த போதிலும், இச் சம்பவத்தில் எவருக்கும் எவ் வித பாதிப்பும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க நேற்று 5ஆவது நாளாக காத்தான குடிப் பகுதியில் தொடர்ந்தும் வழமை நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து இரண்டு பள்ளிவாசல்களில் தஞ்சம் பெற் றுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்களுக்கு தற்போது அரசாங் கத்தின் ஏற்பாட்டில் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (க-8)

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையின் பின்புற வீதி பருத்திதுறை நகரசபையால் திருத் திப் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ப-52)

## கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெணகள் உயர்தரப் பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 14ஆம்திகதி அதிபர்திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ப-52)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

• வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேச செயலகங் களில் கடமையாற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்களிற்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் 1ஆம் திகதியும் திருகோணமலையில் உள்ள கல்வி அமைச்சில் மனித வளப் பிரிவில் நடாத்தப்படவுள்ளது.

இதுபற்றி சகல பிரதேச செயலகங்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-47)

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான பாடல்கள் அடங்கிய இறுவட்டு, ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உதவிக்கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நரவிராஜ் பிரதம விருந்தினராகவும் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் சு.ஜெயராஜ்,யு.என்.எச். சீ. ஆரின் இணைவெளிக்கள உத்தியோகத்தர் செல்வி சொபியா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குகொள்கின்றனர்.

இறுவட்டு,ஒலிநாடா என்பவற்றின் முதல் பிரதிகளை அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டு வைக்க சு.ஜெயராஜ் பெற்றுக்கொள்வார். (ப-16,47)

## சிவதொண்டன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண் டன் நிலையத்தினரால் மாதாந் தம் வெளியிடப்பட்டு வரும் "சிவ தொண்டன்" நவம்பர் மாத இதழ் அண்மையில் வெளி வந்துள்ளது. (க)

## போஷாக்கு உணவு

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, தமது எல்லைப் பரப்புககுட்பட்ட தாய், சேய் சிகிச்சை நிலையங்களில் போஷாக்கு உணவினை சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக வழக்கவுள்ளது.

இவ் உணவுகள் தாய், சேய் சிகிச்சை நிலையங்களில் நேற்று முதல் வழங்கப்படுகின்றன. (ப-101)

## கடற்படையினர் போர்ப் பயிற்சி

(மூளாய்)

திருவடிநிலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையி னர் அவ்வப்போது மாலை வேளைகளில் போர்ப பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.


இதனால் அங்கு ஷெல் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்கின்றன.

அமைதியாக வாழ்ந்த அயற் கிராமங்களான சுழிபுரம், பெரிய புலோ மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளது. (ப-50)

# மும்பாய் கிறிக்கெற் டெஸ்ட் போட்டி

# இரு அணிகளிடையேயும் கடும் மோதல்

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மும்பாயில் நடைபெற்றுவரும் இறுதி டெஸ்ட்



போட்டியின் முதல் இன்னிங்ஸில் இரு அணிகளின் துடுப்பாட்டமும் மிகவும் மோசமாகவே காணப்பட்டது.

இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 104 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. தொடர்ந்து தனது முதல்



இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலிய அணி 203 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. நேற்று முன்தினம் இப்போட்டியில் 18 விக்கெற்றுக்கள் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் லாங்கரும் ஹேடனும் ஆட்டத்தை தொடங்கினர். அணி 17 ஓட்டங்களை பெற்றபோது லாங்கர் 12 ஓட்டங்களுடன் சஹீர்கானின் பந்து வீச்சில் ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பொன்டிங் 11 ஓட்டங்களுடன் கும்ளேயின் பந்துவீச்சில் எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். ஹேடன் 35 ஓட்டங்களுடன முரளிகார்த்திககின் பந்துவீச்சில் கைவ்விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மாட்டின் ஆகக்கூடுதலாக 55 ஓட்டங்களைப் பெற்றார். ஹாடிச்-7, கிளார்க்-17, கில்கிறிஸ்ட்-26, கில்கெஸ்பி-2, ஹெரிட்ஜ்0, ஹாஸ்பரோபவிஷ் 19, மெக்றாத் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்கள் உதிரிகளாக 10 ஓட்டங்கள் கிடைத்தன.


பந்துவீச்சில் கும்ளே 19ஓவர்கள் பந்துவீசி 90 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெற்றுக்களையும் முரளி கார்த்திக் 15.3ஓவர்கள் பந்துவீசி 44 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெற்றுக்களையும், சஹீர்கான் 6 ஓவரில் 10ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்சை விளையாடிய இந்திய அணி இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் விக்கெற் இழப்பின்றி 5 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று 3ஆம் நாள் ஆட்டம் தொடர்ந்த போது அது 205 ஓட்டங்களுக்கு சகல விககெற்றுக்களையும் இழந்தது.

இந்திய அணி சார்பில் லக்ஷ்மன் ஆகக் கூடுதலாக 69ஓட்டங்களைப் பெற்றபோது ஹரிஸ் பந்து வீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். சச்சின் 55 ஓட்டங்



களுடன் ஹரிஸின் பந்து வீச்சில் கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்-ராவிட் 27,ஹவ்25



கும்ளே-13.

பந்து வீச்சில் கிளார்க் 6.2 ஓவர்களில் 9 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 6 விக்கெற்றுக் களை வீழ்த்தினார் ஹரிஸ் மெக்ராத் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினர். (7)




மும்பையில் இந்திய கிரிக்கெட் அணி வீரர்களோடு மழையும் விளையாடிக் கொண்டிருக்கிறது. காயத்தால் அணியிலிருந்து நீக்கப்பட்ட கங்குலியோ பறந்தநாள் கொண்டாடிய தனது மகள் சானாவுடன் கொல்கத்தா வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கிறார். அந்த ஆட்டம் மோசம் ... என்றால், இந்த ஆட்டத்தைப் பாசம் என்பதா?

# துடுப்பை எறிந்த குமாருக்கு 30வீத ஊதியம் அபாரதம்

பாகிஸ்தானுக்கு எதிரான இரணடாவது டெஸ்ட் போட்டியில், கிரிக்கெற் விதிமுறைகளை மீறிய குற்றத்திற்காக இலங்கை அணியின் வீரர் குமார் சங்ககாரவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் நான்காம் நாள் ஆட்டத்தின் போது 138 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த சங்ககார தனது ஆடடமிழப்பு குறித்து விரக்தியடைந்த நிலையில் தனது துடுப்பாட்ட மட்டையை மேலே எறிந்தார்.

கிரிக்கெற் சபையின் ஒழுக்காற்று விதிகளின்படி இது தவறான ஒரு செய்கை என்ற காரணத்தால் சங்ககாரவுக்க அப்போட்டிக்கான அவரது ஊதியத்தில்



30வீதத்தை அபராதமாகச் செலுத்த வேண்டுமென போட்டி நடுவர் தீர்ப்பு வழங்கியுள்ளார். (ப-7)

# இந்திய உடலியக்க நிபுணராக தொடர்ந்தும் அன்ட்ரூ லெய்பஸ்

இந்திய கிரிக்கெற் அணியின் உடல இயக்க நிபுணரான அன்ட்ரூ லெய்பஸ் தொடர்ந்தும் தனது பதவியில் நீடிப்பாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது மேற்படிப்பைத் தொடர்வதற்காக தென்ஆபிரிக்கத் தொடருக்குப் பினனர் இவர் பதவி விலகுவதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. இவ்வாறு பதவி விலகுவதாக சில மாதங்களுக்கு முன் லெய்பஸ் இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபைக்கு கடிதம் எழுதியிருந்த போதும், தற்போது அந்த எண்ணம் அவருக்கு இல்லையென இந்திய கிரிக்கெற் சபை கூறியிருக்கிறது.


1999ஆம ஆண்டு இந்திய கிரிக்கெற் அணியின் உடலியக்க நிபுணராக நியமிக்கப்பட்ட அவுஸ்திரேலியரான லெய்பஸ் 5 வருடத்திற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தார். தற்போது இவரது பதவிக்காலம் 2007ஆம் ஆண்டுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் லெய்பஸ் பற்றி இந்திய கிரிக்கெற் சபை கூறும் போது அவரது பணி மகத்தானது என்றும் அவரது சேவையால்தான் காயமடைந்த வீரர்கள் அதிலிருந்து விரைவாக மீள முடிகின்றது என்றும் அவரது சேவையை பாராட்டியிருக்கிறது. (7)

# கபில்தேவ் சாதனையை முறியடிக்க

# முன்னேறுகிறார் அனில் கும்ளே

இந்திய கிரிக்கெற் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்



அனில கும்ளே இந்தியாவில் அதிக டெஸ்ட் விக்கெற்றுக்களை கைப்பற்றியவர் என்ற சாதனையை நோக்கி முன்னேறி வருகிறார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் சிறப்பாக பந்துவீசி வருகிறார் முப்பாயில நடைபெறும் இறுதி டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 5விக்கெற்றுக்களை வீழ்த்தியதன் மூலம் 425 டெஸ்ட் விக்கெற்றுக்களை அவர் கடந்துள்ளார்.

இவருக்குமுன் இந்திய அணியின முன்னாள் தலைவரும் சகல துறை ஆட்டக்காரருமான கபில் தேவ் 434 விக்கெற்றுக்களை வீழ்த்தி இந்தியாவில் அதிக விக்கெற்றுக்களை வீழ்த்திய சாதனையாளராக இருககிறார். அவரது சாதனையை முறியடிக்க கும்ளேக்கு இன்னும் 9 விக்கெற்றுக்களே தேவை.

ஆயினும் கபில் 131போட்டிகளில 434விக்கெற்றுக்களைப் பெற்றார். ஆனால் கும்ளே 87போட்டிகளில் மாத்திரமே விளையாடி 425விக்கெற்றுக்களைப்பெற்றிருககிறார்.

அத்துடன் மும்பாய் வாங்கடே மைதானத்தில் அதிக விக்கெற்றுக்களை வீழ்த்திய பெருமையையும் பெறுகிறார் முன்பு கபில்தேவ 11 போட்டிகளில் 28 விக்கெற்றுக்களைப் பெற்றிருந்தார். ஆனால் குமளே 6 போட்டிகளில் மாத்திரம்



விளையாடி 32 விக்கெற்றுக்களைப் பெற்றிருக்கிறார் மேலும் 27 போட்டிகளில் 5 விக்கெற்றுக்கு மேல் பெற்றிருக்கிறார். அதில் பாகிஸ்தானுக்கு எதிராக 74 ஓட்டங்களுக்கு 10 விக்கெற்றுக்களைப் பெற்றதே. அவரதுசிறந்தபந்து வீச்சாகும்.(7)

# விளையாட்டு செய்திகள்



சம்பயன்ஸ் லீக் கால்பந்து போட்டியில், பார்சிலோனா வீரர் சாமுவேல் எடோ முன்னேறிச் செல்வதை கால்களால் தடுக்க முனைகிறார் மிலன் வீரர் பாலோ மால்டினி. இந்த போட்டியில் பார்சிலோனா 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# அட்லான்டா சம்பியன்ஷிப் டென்னிஸ்

# ஷரபோவா காலிறுதிக்கு தகுதி


அமெரிக்காவின் விலானோவா நகரில் நடைபெற்றுவரும் அட்லான்டா சம்பியன்ஷிப் டென்னிஸ் போட்டியில் ரஷ்ய வீராங்கனை மரிய ஷரபோவா காலிறுதிக்கு தகுதிபெற்றுள்ளார்.

கடந்த புதனன்னு நடைபெற்ற போட்டியில் மூன்றாம் நிலை வீராங்கனையான ஷரபோவா குரோஷியாவின் ஜெலீனா கோஸ்டனிக்கை எதிர்த்து விளையாடினார்.

இதில் முதல் சுற்றில் 2:6என தோல்வி அடைந்த ஷரபோவா, இரண்டாவது சுற்றில் 6:4என வெற்றிபெற்றார்.

இறுதி வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது சுற்றில் 3:0என அவர் முன்னணியில் இருந்து போது ஜெலீனா காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகிக்கொண்டாா. இதன் காரணமாக ஷரபோவா காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

இன்னொரு போட்டியில் நான்காம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கேப்ரியாட்டி, இன்னொரு அமெரிக்க வீராங்கனையான மேகன் சக்னசியை 4:6,6:3, 6:4என்ற செற்கணக்கில் வென்றார். அதுபோல அவுஸ்திரேலியாவின் அலிகா மோலிக் 6:2,6:4என்ற செற்களில் ஜேர்மனியின் மோலினாவை வென்றார். இதன்மூலம்



இருவரும் இரண்டாவது சுற்றுக்கு தகுதிபெற்றனர். (7)

கொலை மேற்கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து - குறள்

வலம்புரி

## அமெரிக்க மக்களும் ஆதிக்கவெறி பிடித்தவர்கள்தான்!

"... நள்ளிரவுவேளை கடையின் கதவு தட்டப்படுகிறது. ஓர் வயதான பாட்டி நூறு கிராம் தேயிலை கேட்கிறார். நித்திரையில் இருந்து விழித்த, கடையில் வேலை செய்யும் சிறுவன் தேயிலையை நிறுத்துக் கொடுத்து பணம் பெற்றுவிட்டு மீண்டும் உறங்குகின்றான்..."

விடியற்பொழுது எழுந்து பார்க்கின்றான். தராசுக்குள் ஐம்பது கிராம் நிறைப்படி காணப்படுகிறது. ஆ... தவறு செய்துவிட்டேன். நூறு கிராம் தேயலைக்கு பணம் பெற்றுவிட்டு ஐம்பது கிராம் தேயிலையை அல்லவா கொடுத்துவிட்டேன்.

தன் தவறுக்காக அந்தச் சிறுவன் வருந்துகிறான். தன்னைச் சுதாகரித்துக்கொண்டு மேலும் ஐம்பது கிராம் தேயிலையை நிறுத்து அதனை எடுத்துக்கொண்டு பாட்டியின் வீட்டை நோக்கி ஓடுகிறான்.

அதனை பாட்டியிடம் கொடுத்து தன் செயலுக்காக மன்னிப்புக் கோருகின்றான். அந்த நேர்மையுடைய சிறுவனே பிற்காலத்தில் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் இலிங்கன்.

இது ஒரு காலத்தில், சிறுவர்களுக்கான பாடப் புத்தகத்தில் இருந்த கதை. இக்கதையின் நேர்மையின் மகத்துவத்தை விளக்குவதாக இருந்தாலும், அதன் மறுபுறத்தில் அமெரிக்கர்களின் நேர்மையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

ஆனால், இன்று அமெரிக்கர்கள் நேர்மையானவர்கள்தானா? என்ற சந்தேகம் இப்போது உலக மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இச் சந்தேகம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகளில் உச்சமடைந்துள்ளது.

ஈராக் மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து - இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக கூறி அந் நாட்டின் மீது பெரும் தாக்குதல் நடத்தியவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்.

ஈராக் ஜனாதிபதி சதாம் உசேன் மீது கொண்டிருந்த தனிப்பட்ட பகைக்காக, ஈராக் நாட்டையே சுடுகாடாக்கியவர் அவர். அவரின் மிருகத்தனமான தாக்குதலில் உயரிய ஈராக்கின் அழகிய கட்டடங்கள் மண்ணை முத்தமிட்டன. மனித உயிர்கள் அழிக்கப்பட்டன.

இவ்வாறு ஒரு நாட்டின் இறைமையை - சுதந்திரத்தை - மனித இருப்பை கேள்விக்குறியாக்கி ஈராக்கின் எண்ணெய்வள பொருளாதாரத்தைச் சூறையாடிய ஜோர்ஜ் புஷ்ஷை மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்த அமெரிக்கர்கள் மட்டும் நேர்மையானவர்கள் என்று எவ்வாறு கூறமுடியும்?

ஈராக் மீது தாக்குதல் நடத்தியபோது அதனை அமெரிக்க மக்கள் எதிர்ப்பதாக உலக, ஊடகங்கள் தகவல்கள் வெளியிட்டன.

அமெரிக்க ஜனாதிபதி தவறுவிடினும் அந்த நாட்டு மக்கள் நேர்மையானவர்கள். ஆபிரகாம் இலிங்கன் போன்ற நேர்மையானவர்கள் என்றெல்லாம் புகழப்பட்டது.

ஆனால் அந்த புகழ்ச்சிகளையெல்லாம் உடைத்தெறியும் வகையில் அமெரிக்க மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நடந்துகொண்டனர்.

எமது ஜனாதிபதி புஷ் போன்று எமக்கும் அதிகாரம் செலுத்தும் ஆசை உண்டு என்பதை அவர்கள் நிஜப்படுத்தி உள்ளனர். அதன் வெளிப்பாடே புஷ்ஷின் வெற்றியும் ஜோன் ஹெரியின் தோல்வியுமாகும்.

# அமைச்சுப் பதவிகளை தாம் வலிந்து பெறவில்லை என்கிறார் ரிஷாத் பதியுதீன்

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை நாம் வலிந்து பெறவில்லை சமாதான நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவினை வழங்குகின்ற காரணத்தினால் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்குமாறு அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அவற்றைப் பெற்றுக் கொண்டோம் என வன்னி மாவட்ட புனர்வாழ்வு ,அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்களுக்கு ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வழங்கியமைக்கு தமது கடும் எதிர்ப்பைத் தெரிப்பதாக ஜே. வி. பி. தெரிவித்தமை பற்றி ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரிஷாத் பதியுதீன் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசின் பங்காளிக் கட்சியான ஜே. வி. பி. இது தொடர்பாக ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் பத்திரிகைகள் ஊடாக நாம் அறிகின்றோம்.

அரசாங்கத்துக்கும் அரசாங்கம் எடுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் எமது ஆதரவினை வழங்குவதினால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டோம்.

எனவே ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ஜே. வி. பி. யும் ஜனாதிபதியும் இது குறித்துப் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டுமெனவும், இதற்கு தாம் பொறுப்பல்ல எனவும் அவர் மேலும் கூறினார். (க-8)

## குறள்வழிச் செம்மல் இ.வீ.சிங்கன் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

திருக்குறள் விளக்கவுரையாளரும் பல நூற்றுக்கணக்கான நூல்களை எழுதி வெளியிட்ட பிரபலிய எழுத்தாளரும் சிங்கப்பூரின் பிரபல ஐ.வி. எஸ். பிரசுர நிறுவன உரிமையாளருமான குறள்வழிச் செம்மல் கலாநிதி இ. வீ. சிங்கன் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

6 நாட்கள் வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர், நாளை ஞாயிற்றுக்கிழமை பிப 2.30 மணி முதல் 5.30 மணிவரை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கல்விமான்களையும் திருக்குறள் கலை இலக்கிய ஆர்வலர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இந் நிகழ்விற்கு யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்குகின்றார். நாளை மறுநாள் திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை 3நாட்களுக்கு யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு திருக்குறள் ஆய்வரங்குகள், திருக்குறள் கற்பித்தல் வகுப்புக்களை நடாத்தவுள்ளார்.

அதன் பின்னர் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 9.30 மணி முதல் 12.30 மணிவரை வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்குச் சென்று திருக்குறள் கற்பித்தல வகுப்புக்களை நடத்தவுள்ளார். (க)

## மக்கள் இணைந்து வீதியை புனரமைப்பு

(காரைநகர்)

காரைநகர் மேற்கு பிரதான வீதியின், சேதமடைந்த பகுதிகளை அப்பிரதேச பொதுமக்கள் கற்கள் போட்டு சீர்செய்து வருகிறனர்.

இவ்வீதியைப் புனரமைப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பெருமளவு கற்கள் கடந்த மாதம் வீதி யோரங்களில் பறிக்கப்பட்டிருந்தது. ஆனபோதிலும் நீண்ட காலமாக இது திருத்தப்படவில்லை.

இது கண்டு பொறுக்காமலும், இவ் வீதிக்கு அண்மையில், வசிக்கும் பொதுமக்கள் ஒன்றிணைந்து இவ்வாறு ஏற்கனவே குவிக்கப்பட்டிருந்த கற்களைப் பயன்படுத்தி இவ் வீதியைப் புனரமைத்து வருகின்றனர். (ப-246)

# சில்லறை...சில்லறை...சில்லறை?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட காலமாக நிலவிவரும் சில்லறைப் பணத்துக்கான தட்டுபாடு காரணமாக பொதுமக்கள நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக பஸ் வண்டிகளில் பயணம் செய்பவர்கள் சில்லறைப் பணத்தினை பஸ் நடத்துநர்களிடம் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் அதிகமான பஸ் வண்டிகளில நடத்துநர்களுக்கும் பயணிகளுக்குமிடையில் வாக்கு வாதங்கள அடிக்கடி பஸ்களில் இடம்பெறுகின்றன.

அதேவேளை, குடாநாட்டிலுள்ள பெரும்பான்மை வர்த்தக நிலையங்களில் பாவனையாளர்களுக்கு சில்லறைப் பணத்தினை மீதியாகக் கொடுக்க முடியாத நிலை வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்டுள்ளன.

இதனால் அதிகமான வர்த்தக நிலையங்கள் நுகர்வோர்களுககு சில்லறை மீதிப் பணத்திற்குப் பதிலாக தீப்பெட்டிகளையும் ரொபிகளையும் பலவந்தமாகக் கொடுத்து வருகின்றன.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகளின் பிராந்திய அலுவலகங்கள் கொழும்பில் இருந்து சில்லறைப் பணத்தினைப் பெருமளவில் கொண்டு வந்து வங்கிக்கிளைகள் ஊடாக வணிகர்களுக்கு வழங்கி வருகின்ற போதிலும் கூட, குடாநாட்டுக்குக் கொண்டு வரப்படும் சில்லறைப் பணத்துக்கு என்ன நடக்கின்றது எங்கே போய்ச் சேர்கின்றது என்பது புரியாமல் இருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ப-16)

## பொருத்தமற்ற இடமாற்றங்களை புறக்கணித்துவரும் ஆசிரியர்கள்

### வடமராட்சியில் நிலைமை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆசிரியர் இடமாற்ற விதிகளுக்கு முரணான வகையில் இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டு வருவது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம் மாகாண ஆளுநருக்கும் ஜனாதிபதிக்கும் மத்திய கல்வி அமைச்சுக்கும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

அந்தவகையில ஓய்வூதிய வயதினை அண்மித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் இவ்விதமான உள்ளக இடமாறங்கள் கல்வி வலயத்தினால் செய்யப்பட்டுள்ளன. இதனால் வடமராட்சிப் பிரதேசத்தில் இருக்கும் ஆசிரியர்கள் தூர இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இருப்பினும் இத்தகைய ஆசிரியர்களோ தமது இடமாற்ற உத்தரவைக் கவனத்தில் கொள்ளாது தொடர் லீவுகளில் வீடுகளில் இருந்து வருகின்றனர் என அறியப்படுகின்றது.

இவ்வாறான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரிதும் பின்னடைய வேண்டிய நிலை தோன்றி வருவதாகக் கூறப்பட்டுள்ளது. (ப-16)

## மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகம் ஏற்பாடு

(பொன்னாலை)

தமிழீழ மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு தமிழழ எம். ஜி. ஆர் முன்னேற்றக்கழகம் தயாராகி வருகினறது என அதன் தலைவர் க. செல்வக்குமரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் தமிழீழ மாவீரர் நாளை தமிழீழ எம். ஜி.ஆர் முன்னேற்றக்கழகம் தமிழீழம் தழுவிய ரீதியில் சிறப்பாக அனுஷ்டிப்பதற்குத் தயாராகி வருகின்றது.

இதற்கான ஏற்பாடுகள் பிரதேச மட்டத்தில் விரிவாக நடைபெற்று வருகின்றன.

யாழ. குடாநாட்டில் வடக்குக்கோட்டை, பண்டத்தரிப்பு, வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதிகளிலும் வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் இம் மாவீரா நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கு விரிவான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதேநேரம்,தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை சிறப்பாகக் கொண்டாடும் முகமாக, மக்களுக்கு இனிப்பு வகைகள் மற்றும் கேக் வகைகள், குளிர்பானங்கள் என்பன வழங்கப்படவுள்ளன என்றும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-49)

## புங்குடுத்வு சர்வமத சங்கம் சமூக சேவைகளில ஈடுபடுகிறது

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சர்வமத சங்கம் நான்கு முன்பள்ளிகளைப் பொறுப்பேற்று 20 பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியர் என்ற முறையில் நியமித்து அவ்வாசிரியருக்கான சம்பளத்தினையும், முன்பள்ளி சிறார்களுக்கான போஷாக்கு உணவினையும் வழங்கி வருகின்றது.

இதனடிப்படையில் சரவணை, சின்னமடு திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளி, புங்குடுதீவு பாரதி முன்பள்ளி, வீராமலை முன்பள்ளி, நசரேத் முன்பள்ளி ஆகியன இச் சங்கத்தினால் பொறுபபேற்கப்பட்டுள்ளன. .

இதனை விட புங்குடுதீவில் வாழும் வறிய மற்றும் விதவைக் குடும்பங்களுக்கு சிறு கைத்தொழில், கால்நடைவளர்ப்பு போன்றவற்றுககான பயிற்சி வகுப்புக்களும் வழஙகப்படுகின்றன.

(ப-126)

## தினசரி தியானம்
## விவேகச் சிந்தனைகள்

சுதந்திர இலக்கை அடைய உதவாமல் போகும் எதுவும் நிச்சயம் ஆபத்தாகவே முடியும். பிறகு செயல் முறை மதம் என்பது தான் என்ன? இந்த உலகம் மற்றும் மறுவுலகப் பொருட்களையெல்லாம் அந்த ஒரே இலக்கை அடைய, அதாவது சுதந்திரத்தை அடையப் பயன்பட வேண்டும். துளி இன்பமோ, துளியளவு சுகமோ பெற வேண்டுமானால் இதயமும் மனமும் இணைந்த எல்லையற்ற சக்தியைச் செலவு செய்ய வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# யாழ் முற்றவெளிப் பிரதேசம் தனியார் பஸ் தரிப்புக்கு ஒதுக்கப்படும்

## யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தனியார் பஸ்தரிப்பு நிலையமாக முற்றவெளிப் பிரதேசத்தை ஒதுக்கித் தருவதாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும் விபத்துக்கள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்புக்குச் சென்ற சமயம் ஜனாதிபதியைத் தான் சந்தித்துப் பேசியதாகவும் அதன்போது யாழ். மாவட்ட நிலைவரம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தன்னைக் கேட்டறிந்து கொண்டதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் பெருகிவரும் வாகன விபத்துக்கள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி தனக்கு ஆலோசனை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை 2004 ஆம் ஆண்டின் நேற்றுவரை 55 விபத்து மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக அரச அதிபர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பின்போது யாழ். செயலக புனர்வாழ்வு புனரமைப்பு பணிப்பாளர் பொ. சுந்தரம்பிள்ளை உதவி அரச அதிபர் வீரகத்திப்பிள்ளை யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா போக்குவரத்து பிரதி ஆணையாளர், யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜயவர்த்தன, பொலிஸ் போக்குவரத்து பொறுப்பதிகாரி ஐ.பி. சேனாதிரத்ன மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தனியார் போக்குவரத்துப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ச-5,51)





யாழ். குடாநாட்டிற்கு இரகசிய விஜயம் மேற்கொண்டிருந்த வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவை பலாலி விமான நிலையத்தில் வைத்து யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி தென்னக்கோன் வரவேற்பதையும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்று யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதன் மற்றும் வைத்திய சாலை அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

## புலிகளை பேச்சு மேசைக்கு...

சமாதானம் ஏற்பட முக்கியமாக விடுதலைப் புலிகள் ஆதரவும் தேவை.

அதனால் சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரவேண்டும்.

இதற்காக நான் அதிக பட்சம் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்து வருகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த மூன்று வருடங்களாக எவ்வித பாதிப்புமின்றி நீடித்து வருகின்றது.

இலங்கையில் 20 ஆண்டுகளாக நீடித்து வந்த இனப்பிரச்சினை போரில் கடந்த மூன்று ஆண்டுகளாக போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்தப் போர் நிறுத்தத்தை பார்க்கும்போது சமாதான நடவடிக்கைகள் முன்நோக்கி நகர்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நான் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன்.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதனால் நாட்டில் நிரந்தர சமாதானம் மலரும் என்ற நம்பிக்கை தற்போது மிகவும் அதிகரித்துள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-121)

## வங்கக் கடலில் தாழமுக்கம்

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக இன்னும் ஓரிரு நாட்களில் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் காற்றுடன் கூடியமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் பெய்து வரும் மழைகாரனமாக குடிசைகளில் வசித்துவரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

அவர்களது வீடுகளுக்குள் நீர் புகுந்த நிலையில் அவர்கள் வேறு இடங்களை நாடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொம்மை வெளி, செல்வபுரம், மற்றும் கண்ணாபுரம், போன்ற குடியிருப்பு திட்டங்களில் உள்ள மக்களே பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

(ச)

## சோனியா - சந்திரிகா...

கலந்துகொண்டனர்.

இதேவேளை இந்தியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நண்பகல் இந்திய வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பு புதுடில்லியில் உள்ள தாஜ்பலஸ் ஹோட்டலில் நடைபெற்றது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த 22 வர்த்தகர்கள் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

அத்துடன் இச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சுசில்பிரேம ஜெயந்த ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கையில் இந்திய முதலீட்டாளர்கள் அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது குறித்து இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

(இ-121)

## காணாமல் போனோர்...

தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கின் முதலாவது எதிர்மனுதாரர் சார்பாக சட்டத்தரணிகள் நேற்றைய தினம் ஆஜராகுவர் என எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும் சட்டத்தரணிகள் எவருமே அவருக்கு சார்பாக ஆஜராக முன்வரவில்லை.

இது விடயத்தில் தன்னால் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்ய முடியாதிருப்பதாக எதிர்மனுதாரர் மேல்நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதேவேளை இந்த வழக்கில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான கடப்பாடும் இல்லை என்றும் நீதிபதி தெரிவித்து தனக்குரிய சட்டத்தரணியை அவரே ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை காணாமற்போனோர் சார்பாக ஆஜராகியிருந்த மனிதஉரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணி எம். ரெமீடியஸ் இவ் வழக்கினை சட்டமா அதிபர் திணைக்களம் வேண்டுமென்றே இழுத்தடிப்பதாக நீதிபதியிடம் தெரிவித்திருந்தார். இவ் வழக்கின் இரண்டாம், நாலாம், ஐந்தாம் எதிர்மனுதாரர் சார்பில் அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி ஆஜராகியிருந்தார்.

(ச-16-05)

## கலந்துரையாடல்

(பொன்னாலை)

மாவீரர் நாள் முன்னேற்பாடு தொடர்பான விஷேட கலந்துரையாடல் ஒன்று வலி - மேற்கு அரசியற்துறையினரின் ஏற்பாட்டில் அராலி தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இன்று பி.ப 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பிரதேசத்திற்குட்பட்ட சகல பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இதில் தவறாக கலந்து கொள்ளுமாறு வலி - மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அஅன்பு கேட்டுக்கொண்டுள்ளார். (ச-49)

## அமெரிக்க...

பயங்கரவாதத்தை எதிர்க்கும் நடவடிக்கையில் இலங்கையும் அமெரிக்காவும் ஒரே கொள்கையைக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இரு நாடுகளுக்கிடையேயும் மரபு ரீதியாக நிகழும் உறவு குறித்தும் வலியுறுத்திக் காட்டப்பட்டுள்ளது. (ச-121)

## மாவீரர் பெற்றோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் கல்லறைகள், நினைவுக்கற்கள் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் தங்களுக்கு அருகிலுள்ள பிரதேச, கோட்ட அரசியல் துறைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

மாவீரர்தின இறுதி நாளான எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர்களின் நினைவுச் சுடரேற்றுவதற்காக பெற்றோர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ச)


நாதன்ஸ் சினிமா

(யாழ்ப்பாணம்)

DENNIS HOPPER'S TYCUS

(ஆங்கிலப் படம்)

தினசரி 4 காட்சிகள்

மு.ப. 10.00, பி.ப. 2.00, 6.00

இரவு 8.00

(சி-675)


## கண்ணீர் அஞ்சலி

## நடராசா மகேஸ்வரன்


எமது வகுப்பு **மாணவி தக்ஷாவின்** அன்புத் தந்தையார் **நடராசா மகேஸ்வரன்** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**10 A வகுப்பாசிரியர், மாணவர்கள்**

## நினைவஞ்சலி

25 ✲ 01 ✲ 1943



27 ✲ 09 ✲ 2004

### வ.சுந்தரம் - காங்கேசன்துறை

சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதியாக வாழ்ந்த போதும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினராக தேர்தலில் வெற்றிபெற்று வலிகாமம் வடக்கு மக்களின் நலன்களுக்காக தொடர்ந்து குரல்கொடுத்தவர், அயராது உழைத்தவர் தோழர் சுந்தரம். அவரை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

(c/680)

**வலிவடக்கு நண்பர்கள்**

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.